ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021 செத்தெம்பர் 13 |

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2021 யூலை

## பொதுநோக்கு

வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 யூலையில் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது. ஏற்றுமதிப் பொருட்களிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய காலப்பகுதியிலும் பார்க்க இம்மாத காலப்பகுதியில் அதிகரித்திருந்தாலும், இறக்குமதிகள் மீதான செலவினம் வேகமாக அதிகரித்தமையானது வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையாக 2021 யூலையில் விரிவடையக் காரணமாக அமைந்தது. 2021 யூனில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து யூலையிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் குறைந்தளவான மட்டங்களிலேயே காணப்பட்டன. அதேவேளை, படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் நாட்டின் அப்பழுக்கற்ற பதிவினைப் பேணி, இலங்கை 2021 யூலையில் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த 10 வருட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வெற்றிகரமாகத் தீர்ப்பனவு செய்தது. அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் சிறிதளவான தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்த வேளையில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இம்மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி உடன் செலாவணி வீதம் 2021 யூலையில் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்[(அ)]

| வகை | யூலை 2020 ஐ.அ.டொ.மில் | யூலை 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-யூலை 2020 ஐ.அ.டொ.மில் | சன-யூலை 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,085 | 1,104 | 1.7 | 5,498 | 6,803 | 23.7 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,294 | 1,710 | 32.2 | 8,968 | 11,725 | 30.7 |
| வர்த்தக மீதி | -209 | -607 | | -3,471 | -4,922 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | - | 3 (இ) | - | 682 (ஆ) | 26 (இ) | -96.2 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 702 | 453 | -35.4 | 3,682 | 3,778 | 2.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -18 | -41 | | -129 | -165 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 102 | 55 | | 1,315 | 1,233 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 1 | 1 | | 91 | 16 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 101 | 54 | | 1,224 | 1,218 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (மொத்தம்) (உ) | | | | 188 | 198 | |
| திரண்ட நிலுவை | | | | -939 | -2,755 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,
கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்.
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2021 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான தரவுகள் கிடைக்கப்பெறுவதுடன் முதலீட்டுச் சபை மூலம் பதிவுசெய்யப்பட்டவாறான தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/ta/node/6181

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2020 யூலையில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 209 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், 2021 யூலையில் ஐ.அ.டொலர் 607 மில்லியனிற்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் விரிவடைந்தது. வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறையும் 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் 2020 இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,471 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,922 மில்லியனிற்கு விரிவடைந்தது. இவ்விளைவிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதம் இறக்குமதி விலைகளின் அதிகரிப்பானது ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பினை விட விஞ்சிக் காணப்பட்டமையால் 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் 11.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வரைபடம்: 1 : 2021 சனவரி – யூலை காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2020 – 2021)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2020-2021)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்**[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: தற்போதைய உலகளாவிய நோய்த்தொற்றின் போதும் 2021 யூலையில் ஏற்றுமதிகள் சிறப்பாக செயலாற்றியுள்ளன.** வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் ஐ.அ.டொலர் 1,104 மில்லியனிற்கு 1.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,498 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,803 மில்லியனாக விளங்கின.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் 1.1 சதவீதத்தினால் அதிகரித்தன. பெற்றோலிய உற்பத்திகள், பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்கள் (எந்திரவியல் சாதனங்களதும் இலத்திரனியல் சாதனங்களதும் முதன்மைப் பாகங்கள்) மற்றும் இறப்பர் உற்பத்திகள் (டயர்கள் மற்றும் கையுறைகள்) என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமையே இவ்வதிகரிப்பிற்கான முக்கிய காரணமாகும். பெற்றோலிய உற்பத்திகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மேம்பட்டமைக்கு நிரம்பல் செய்யப்பட்ட நீர்கல எரிபொருளின் விலைகள் மற்றும் அளவுகளிலும் அதேபோல் நிரம்பல் செய்யப்பட்ட வானூர்தி எரிபொருட்களின் விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். 2020 யூலையிலும் பார்க்க 2021 யூலையில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்த துறைகளாக உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (முக்கியமாக இதர உணவுத் தயாரிப்புக்கள்), ஆடைகள் மற்றும் புடவைகள் (முக்கியமாக முகக்கவசம்) மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் என்பன காணப்பட்டன. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சிய பிராந்தியத்திற்கான ஆடை ஏற்றுமதிகள் 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் வீழ்ச்சியடைந்த வேளையில், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளிற்கான ஏற்றுமதிகள் அதிகரித்தன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** வேளாண்மைப் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் 2.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கடலுணவு (புதிய மற்றும் உறைந்த மீன், மீன் துண்டங்கள், கூனி இறால் மற்றும் இறால்) மற்றும் வாசனைத்திரவியங்கள் (கருவா, மிளகு, கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிபத்திரி போன்றவை) என்பனவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமையே காரணமாகும். இருப்பினும், தேயிலை ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்றும் விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். மேலும், காய்கறிகள் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தமைக்கு முறையே பருப்பு மற்றும் பாக்குகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 யூலையிலும் பார்க்க 2021 யூலையில் 6.9 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டமைக்கு கருங்கல், பளிங்கு மற்றும் சிர்கோனிய தாது போன்ற கனிப்பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

[1] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதிகள் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:**

ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 4.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 யூலையில் 6.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இது ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பு ஏற்றுமதி அளவுகளின் வீழ்ச்சியை விஞ்சியமையின் காரணமாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | யூலை 2020 (ஐ.அ.டொ. மில்) | யூலை 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூலை 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-யூலை 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **819.3** | **828.7** | **1.1** | **4,176.5** | **5,236.4** | **25.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 64.3 | 48.5 | -24.6 | 262.2 | 296.5 | 13.1 |
| விலங்குத்தீன் | 18.7 | 13.2 | -29.6 | 67.9 | 72.0 | 6.1 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 469.2 | 454.1 | -3.2 | 2,413.0 | 2,941.5 | 21.9 |
| இதில் ஆடைகள் | 404.3 | 415.5 | 2.8 | 2,138.5 | 2,683.0 | 25.5 |
| புடவைகள் | 26.5 | 27.6 | 4.2 | 132.4 | 184.2 | 39.1 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 38.3 | 11.0 | -71.2 | 142.1 | 74.4 | -47.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 82.2 | 93.4 | 13.6 | 417.9 | 593.1 | 41.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 17.7 | 24.1 | 36.6 | 90.4 | 156.3 | 72.9 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 32.0 | 45.8 | 43.4 | 178.4 | 288.0 | 61.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 8.2 | 10.6 | 28.4 | 39.1 | 65.3 | 67.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 26.7 | 52.0 | 94.7 | 246.2 | 248.6 | 1.0 |
| இரசாயன உற்பத்திகள் | 16.6 | 17.4 | 4.7 | 91.9 | 127.0 | 38.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.9 | 11.3 | 3.6 | 55.4 | 72.0 | 30.0 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 6.3 | 3.0 | -51.8 | 21.4 | 29.3 | 37.3 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 6.4 | 5.4 | -15.1 | 32.5 | 28.0 | -14.0 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 22.2 | 7.2 | -67.7 | 48.9 | 44.7 | -8.5 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 10.1 | 11.4 | 13.0 | 65.5 | 84.5 | 29.0 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.4 | 4.0 | 66.0 | 11.5 | 21.6 | 88.2 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 25.5 | 27.3 | 6.8 | 134.3 | 167.9 | 25.1 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **261.2** | **267.1** | **2.3** | **1,300.1** | **1,526.0** | **17.4** |
| தேயிலை | 130.9 | 115.1 | -12.1 | 702.6 | 765.7 | 9.0 |
| இறப்பர் | 2.9 | 3.3 | 12.3 | 16.4 | 23.5 | 43.9 |
| தேங்காய் | 40.8 | 40.6 | -0.5 | 187.6 | 236.9 | 26.3 |
| வாசனைத்திரவியங்கள் | 40.9 | 45.8 | 12.0 | 154.8 | 242.7 | 56.8 |
| காய்கறிகள் | 7.1 | 4.0 | -43.9 | 21.0 | 16.2 | -23.0 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.5 | 2.7 | 6.7 | 12.0 | 18.8 | 56.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 17.5 | 15.1 | -13.6 | 88.2 | 75.5 | -14.4 |
| கடலுணவு | 18.5 | 40.5 | 119.1 | 117.6 | 146.9 | 24.9 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.9** | **2.7** | **-6.9** | **12.6** | **27.6** | **118.2** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.6** | **5.0** | **212.6** | **8.6** | **12.5** | **46.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,085.0** | **1,103.5** | **1.7** | **5,497.8** | **6,802.6** | **23.7** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீதான செலவினம் 2020 யூலையில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,294 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,710 மில்லியனிற்கு 32.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதிகளின் சகல முக்கிய வகைகளிலும் அதாவது நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றில் அவதானிக்கப்பட்ட போதும் சில இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இன்னும் நடைமுறையில் உள்ளன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,968 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் மொத்த இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 11,725 மில்லியனாக விளங்கியது.

**நுகர்வுப் பொருட்கள்:** சீனி, பால்மா மற்றும் கடலுணவு ஆகியவற்றிலிருந்து முதன்மையாகத் தோன்றிய வீழ்ச்சியுடன் உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதி மீதான செலவினம் 9.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், தேங்காய் எண்ணெய், காய்கறிகள் (முக்கியமாக உள்ளி, பருப்பு, கொண்டைக் கடலை மற்றும் சிவப்பு வெங்காயம்) மற்றும் வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்) போன்ற சில உணவு மற்றும் குடிபான கூறுகள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. சகல உணவல்லா நுகர்வுப் பொருட்களின் (இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் உள்ள தனியாள் ஊர்திகள் தவிர) பரந்த அடிப்படையிலான அதிகரிப்புடன் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 41.0 சதவீதத்தினால் அதிகரித்தது. மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் (முக்கியமாக தடுப்பூசி), வீட்டு உபயோகச் சாதனங்கள் (முக்கியமாக தொலைக்காட்சி) மற்றும் இறப்பர் டயர்கள் என்பவற்றின் இறக்குமதிகள் இவ்வதிகரிப்புக்கு பாரியளவில் பங்களித்துள்ளது.

**இடைநிலைப் பொருட்கள்:** பெரும்பாலான முக்கிய வகைகளின் அதிகரிப்புடன் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 யூலையிலும் பார்க்க 2021 யூலையில் 33.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அடிப்படை உலோகங்கள் பெறுமதியில் உயர்ந்தளவான முழுமையான அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு மீதான செலவினம் அதிகரித்தமையே காரணமாகும். சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் மசகெண்ணெய் விலைகளின் அதிகரிப்புடன் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2020 யூலையிலும் பார்க்க 2021 யூலையில் 27.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அவற்றின் இறக்குமதி அளவுகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. மசகெண்ணெய் பீப்பாய் ஒன்றிற்கான இறக்குமதிச் செலவினம் 2020 யூலையில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 46.23 உடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் ஐ.அ.டொலர் 68.92 ஆக விளங்கியது. மேலும், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான செலவினமும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

[2] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளன.

**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் மூன்று வகை முதலீட்டுப் பொருட்களான பொறி மற்றும் கருவிகள், கட்டட மூலப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றின் கீழான பெரும்பாலான ஒவ்வொரு துணை வகைகளிலும் கணிசமான அதிகரிப்புக்களுடன் 2020இன் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் 42.4 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், சீமெந்து மீதான இறக்குமதிச் செலவினம் கிட்டியளவில் சமனாகக் காணப்பட்டது. உள்நாட்டுச் சீமெந்து உற்பத்தி 2020 நடுப்பகுதியில் சில இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து உயர்வடைந்து காணப்பட்டதுடன் 2021 யூனில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட போதும், முடக்க நிலைக்கு மத்தியிலும் கட்டடவாக்கச் செயற்பாடுகள் ஓரளவிற்கு மேற்கொள்ளப்படுவதனால் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்படுகின்றது.

**இறக்குமதிச் சுட்டெண்கள்**: 2021 யூலையில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 10.1 சதவீதத்தினாலும் 20.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இது இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உயர்ந்த இறக்குமதி அளவு மற்றும் விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கத்திற்குக் காரணமாக அமைய முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | யூலை 2020 (ஐ.அ.டொ. மில்) | யூலை 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூலை 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-யூலை 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **289.6** | **342.7** | **18.3** | **2,071.7** | **2,255.0** | **8.8** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 130.2 | 117.9 | -9.4 | 917.5 | 1,032.8 | 12.6 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.3 | 2.4 | 92.7 | 18.0 | 22.1 | 22.3 |
| பால் உற்பத்திகள் | 24.8 | 16.2 | -35.0 | 205.9 | 200.6 | -2.6 |
| காய்கறிகள் | 25.6 | 31.5 | 22.7 | 228.0 | 242.6 | 6.4 |
| கடலுணவு | 19.3 | 15.0 | -22.3 | 126.8 | 67.7 | -46.6 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 27.7 | 1.4 | -95.0 | 144.1 | 208.1 | 44.4 |
| வாசனைத்திரவியங்கள் | 8.5 | 12.3 | 45.8 | 76.2 | 80.8 | 6.0 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 23.0 | 39.1 | 70.3 | 118.5 | 211.0 | 78.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 159.4 | 224.8 | 41.0 | 1,154.2 | 1,222.2 | 5.9 |
| தனியாள் ஊர்திகள் | 6.1 | 2.3 | -62.1 | 279.5 | 6.7 | -97.6 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 63.0 | 105.3 | 67.2 | 337.7 | 433.5 | 28.4 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 8.8 | 24.0 | 173.1 | 91.8 | 163.3 | 77.9 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 13.4 | 14.9 | 10.8 | 124.4 | 120.2 | -3.4 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 45.6 | 45.0 | -1.3 | 146.9 | 250.3 | 70.3 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 10.6 | 12.4 | 16.8 | 81.1 | 90.1 | 11.1 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 11.8 | 20.8 | 76.5 | 92.8 | 158.1 | 70.5 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **734.3** | **982.3** | **33.8** | **4,901.1** | **6,932.4** | **41.4** |
| எரிபொருள் | 200.3 | 256.0 | 27.8 | 1,443.7 | 2,043.2 | 41.5 |
| இதில் மசகெண்ணெய் | 67.0 | 91.8 | 37.0 | 318.3 | 408.8 | 28.4 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 130.6 | 159.8 | 22.4 | 996.2 | 1,503.3 | 50.9 |
| நிலக்கரி | 2.8 | 4.5 | 62.7 | 129.2 | 131.2 | 1.6 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 10.3 | 12.7 | 23.3 | 49.5 | 74.9 | 51.4 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 197.1 | 251.2 | 27.4 | 1,262.8 | 1,702.3 | 34.8 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 33.8 | 40.6 | 20.1 | 208.9 | 282.0 | 35.0 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 16.1 | 25.3 | 57.1 | 117.9 | 162.2 | 37.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 26.8 | 26.3 | -1.7 | 183.3 | 210.9 | 15.1 |
| அடிப்படை உலோகங்கள் | 36.4 | 105.2 | 189.2 | 207.6 | 459.7 | 121.4 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 46.6 | 60.4 | 29.5 | 275.0 | 464.1 | 68.8 |
| இரசாயன உற்பத்திகள் | 74.1 | 85.1 | 14.8 | 453.0 | 652.5 | 44.0 |
| வளமாக்கி | 9.1 | 5.6 | -38.6 | 116.1 | 103.0 | -11.2 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 18.6 | 31.1 | 67.3 | 128.8 | 230.4 | 78.8 |
| கனிம உற்பத்திகள் | 14.8 | 13.3 | -10.0 | 93.3 | 88.4 | -5.3 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 50.3 | 69.3 | 38.0 | 361.2 | 458.8 | 27.0 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **269.1** | **383.2** | **42.4** | **1,984.3** | **2,530.6** | **27.5** |
| பொறி மற்றும் கருவிகள் | 157.0 | 232.0 | 47.8 | 1,147.0 | 1,598.5 | 39.4 |
| கட்டடப் பொருட்கள் | 94.2 | 104.8 | 11.3 | 589.3 | 706.4 | 19.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 17.7 | 44.9 | 153.7 | 246.2 | 222.5 | -9.6 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 1.5 | 506.4 | 1.7 | 3.2 | 84.1 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.7** | **1.9** | **176.4** | **11.2** | **6.8** | **-39.4** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,293.7** | **1,710.1** | **32.2** | **8,968.3** | **11,724.8** | **30.7** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,093.4** | **1,454.0** | **33.0** | **7,524.6** | **9,681.6** | **28.7** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் வீழ்ச்சியடைந்தது.** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021 யூலை மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 453 மில்லியனாக விளங்கின. 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 3,778 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.6 சதவீத சிறிதளவான அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது.

**சுற்றுலாத்துறை 2021 யூலையில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான வருகைகளையே பதிவுசெய்தது.** இதற்கமைய, 2021 யூலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 யூனில் பதிவுசெய்யப்பட்ட 1,614 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2,429 ஆக பதிவுசெய்யப்பட்டன. மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020இன் தொடர்பான காலத்திற்கான 507,311 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2021 யூலை வரையான முதல் ஏழு மாத காலப்பகுதியில் 19,337 வருகைகளைப் பதிவுசெய்தன. 2021 யூலை காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக ஐக்கிய இராச்சியம், மாலைதீவு மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன காணப்பட்டன. சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுகின்ற சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2021 யூலையில் ஐ.அ.டொலர் 3 மில்லியனாகக் காணப்பட்டன. சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2020இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 யூலை வரையான ஏழு மாத காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 26 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தன.

**வரைபடம் 9: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**வரைபடம் 10: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

**2021 யூலையில் அரச பிணையங்கள் சந்தையில் சிறிதளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் பதிவு செய்யப்பட்டன.** 2021 யூலை வரையான ஏழு மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 24 மில்லியனாக விளங்கிய வேளையில், வெளிநின்ற வெளிப்படுத்துகை 2021 யூலை இறுதியளவில் ஐ.அ.டொலர் 12 மில்லியனாகத் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை, 2021 யூலையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 41 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்து 2021 யூலை வரையான ஏழு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 165 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைத் தோற்றுவித்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் பெறுமதியான முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 2.8 பில்லியனாக விளங்கியது.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இம்மட்டமானது இறக்குமதிகளின் 1.8 மாதங்களுக்குச் சமனாகக் காணப்படுகின்றது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 5.9 பில்லியனாக விளங்கி 3.8 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்படுகின்றது. மேலே அறிக்கையிடப்பட்ட ஒதுக்குகளின் மட்டமானது சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான சீன யுவான் 10 பில்லியன் பெறுமதியான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) மூன்று வருட இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையினை உள்ளடக்கவில்லை. அதேவேளை, பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கும் வங்காளதேச வங்கிக்குமிடையிலான இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளின் கீழான ஆரம்ப பகிர்ந்தளிப்புக்களின் பெறுகையுடன் 2021 ஓகத்தில் நாட்டிற்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரித்தன.

**வரைபடம் 11: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடன் செலாவணி வீதம் 2021 யூலையில் தொடர்ந்தும் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது.** இதற்கமைய, இம்மாத காலப்பகுதியில் இலங்கையின் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 0.6 சதவீத சிறிதளவானதொரு உயர்வினைப் பதிவுசெய்தது. 2021 செத்தெம்பர் 10 வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் ரூபா ஐ.அ. டொலருக்கெதிராக 6.8 சதவீத தேய்வினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2021 செத்தெம்பர் 10 வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பனவற்றிற்கு எதிராக தேய்வடைந்தது. ஏற்றுமதி பெறுகைகள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒரு பகுதியைத் தொடர்ந்தும் ஈர்த்துக்கொள்ளும் வேளையில், மத்திய வங்கி அத்தியாவசிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களைச் சீராக்குவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு தொடர்பிலான உட்பாய்ச்சல்களின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை வழங்கியது.

**வரைபடம் 12: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | 2021 (செத்தெம்பர் 10 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -6.8% |
| யூரோ | +2.6% | -11.2% | -3.0% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -6.2% | -8.2% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | -0.8% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -2.7% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -6.3% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு I:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | யூலை 2020 ஐ.அ.டொ. மில் | யூலை 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-யூலை 2020 ஐ.அ.டொ. மில் | சன-யூலை 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **289.9** | **275.4** | **-5.0** | **1368.1** | **1554.2** | **13.6** |
| 03. மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 20.4 | 48.0 | **134.7** | 132.3 | 171.1 | **29.3** |
| 04. தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 4.8 | 7.1 | **47.3** | 37.2 | 39.0 | **4.7** |
| 05. காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 49.9 | 45.6 | **-8.5** | 227.0 | 252.5 | **11.2** |
| 07. கோப்பி, தேயிலை, கொக்கோ, சாவனைத்திரவியங்களின் தயாரிப்புக்கள் அவற்றில் | 168.5 | 155.9 | **-7.5** | 840.1 | 986.1 | **17.4** |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **11.7** | **10.4** | **-11.2** | **59.2** | **75.3** | **27.1** |
| 11 குடிபானங்கள் | 2.2 | 2.2 | **2.4** | 18.1 | 17.0 | **-6.1** |
| 12. புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 9.5 | 8.2 | **-14.3** | 41.2 | 58.4 | **41.7** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **42.8** | **37.5** | **-12.3** | **197.5** | **246.8** | **25.0** |
| 23 மசகு இறப்பர் | 3.0 | 3.4 | **10.8** | 16.9 | 24.1 | **43.0** |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 28.4 | 22.2 | **-21.8** | 121.8 | 139.1 | **14.2** |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **26.7** | **52.0** | **94.7** | **246.2** | **248.6** | **1.0** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 20.6 | 40.5 | **97.1** | 233.5 | 218.0 | **-6.6** |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 6.1 | 11.4 | **86.6** | 12.6 | 30.6 | **142.1** |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **11.3** | **12.7** | **12.2** | **45.5** | **69.3** | **52.4** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 9.4 | 8.5 | **-9.4** | 37.6 | 47.0 | **25.0** |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **22.3** | **24.8** | **10.8** | **119.0** | **163.9** | **37.7** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **151.3** | **145.7** | **-3.7** | **746.7** | **938.7** | **25.7** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 57.3 | 61.4 | **7.2** | 292.7 | 382.4 | **30.6** |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட் பொருட்கள் போன்றவை வே.எ.கு | 57.1 | 36.8 | **-35.5** | 250.8 | 245.7 | **-2.0** |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 21.5 | 29.6 | **37.6** | 108.3 | 189.2 | **74.8** |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **38.6** | **54.8** | **41.9** | **210.3** | **344.2** | **63.7** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 24.0 | 29.9 | **24.6** | 128.2 | 185.7 | **44.9** |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **490.3** | **490.2** | **0.0** | **2505.3** | **3161.1** | **26.2** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 450.2 | 451.8 | **0.4** | 2302.6 | 2913.5 | **26.5** |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **...** | **...** | **...** | **0.0** | **0.3** | **5829.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1085.0** | **1103.5** | **1.7** | **5497.8** | **6802.6** | **23.7** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு – வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறிப்புக் குறிப்பு 4 இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு II:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)**

| வகை | யூலை 2020 ஐ.அ.டொ. மில் | யூலை 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-யூலை 2020 ஐ.அ.டொ. மில் | சன-யூலை 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **167.7** | **149.2** | **-11.1** | **1224.5** | **1339.8** | **9.4** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 24.9 | 16.2 | **-34.9** | 206.1 | 200.9 | **-2.6** |
| 03. மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 19.4 | 15.1 | **-22.0** | 127.4 | 68.3 | **-46.4** |
| 04. தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 27.8 | 28.5 | **2.5** | 200.4 | 231.1 | **15.3** |
| 05. காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 30.5 | 34.8 | **13.8** | 267.0 | 283.5 | **6.2** |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 27.7 | 1.4 | **-95.0** | 144.1 | 208.1 | **44.4** |
| 07. கோப்பி, தேயிலை, கொக்கோ, சாவனைத்திரவியங்களின் தயாரிப்புக்கள் அவற்றில் | 11.1 | 15.6 | **40.9** | 96.8 | 104.9 | **8.3** |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **6.3** | **4.1** | **-35.3** | **58.2** | **41.2** | **-29.2** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **40.9** | **46.6** | **13.8** | **272.6** | **333.3** | **22.3** |
| 23 மசகு இறப்பர் | 14.9 | 26.9 | **80.0** | 108.4 | 202.9 | **87.1** |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 5.6 | 0.7 | **-88.0** | 59.5 | 13.4 | **-77.5** |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **200.3** | **256.0** | **27.8** | **1443.7** | **2043.2** | **41.5** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 180.1 | 230.6 | **28.0** | 1178.5 | 1724.5 | **46.3** |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 17.4 | 21.0 | **20.7** | 136.1 | 187.5 | **37.8** |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **19.0** | **41.9** | **121.0** | **89.2** | **193.7** | **117.1** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 18.8 | 40.3 | **114.6** | 84.5 | 178.5 | **111.1** |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **186.3** | **252.9** | **35.7** | **1162.0** | **1630.7** | **40.3** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 56.6 | 100.7 | **77.9** | 314.6 | 398.0 | **26.5** |
| 56 வளமாக்கி, மற்றும் தயாரிக்கப்பட்டவை | 9.1 | 5.6 | **-38.6** | 115.9 | 102.6 | **-11.5** |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 31.1 | 43.6 | **40.2** | 180.7 | 343.2 | **89.9** |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 11.9 | 12.8 | **7.3** | 77.3 | 99.2 | **28.3** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **383.1** | **531.6** | **38.8** | **2380.1** | **3339.1** | **40.3** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 33.1 | 38.5 | **16.3** | 202.2 | 269.5 | **33.3** |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட் பொருட்கள் போன்றவை வே.எ.கு | 191.1 | 247.3 | **29.4** | 1202.3 | 1668.9 | **38.8** |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 49.5 | 46.0 | **-7.1** | 294.8 | 293.9 | **-0.3** |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 47.9 | 128.6 | **168.4** | 287.7 | 557.2 | **93.6** |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **224.3** | **347.5** | **54.9** | **1879.9** | **2259.1** | **20.2** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 26.2 | 61.8 | **135.6** | 227.5 | 384.0 | **68.8** |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 40.2 | 53.7 | **33.7** | 275.7 | 364.2 | **32.1** |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 22.8 | 25.0 | **9.9** | 106.6 | 186.0 | **74.5** |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 63.5 | 81.4 | **28.2** | 262.0 | 488.1 | **86.3** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 42.6 | 63.0 | **47.8** | 295.4 | 422.8 | **43.1** |
| 78 வீதி ஊர்திகளி | 18.5 | 28.8 | **55.6** | 458.7 | 215.1 | **-53.1** |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **63.1** | **77.9** | **23.6** | **448.1** | **536.7** | **19.8** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 10.7 | 14.0 | **30.7** | 105.3 | 101.4 | **-3.8** |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 16.6 | 23.8 | **43.0** | 105.7 | 136.1 | **28.7** |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **2.6** | **2.4** | **-7.3** | **9.9** | **8.0** | **-19.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1293.7** | **1710.1** | **32.2** | **8968.3** | **11724.8** | **30.7** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு – வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறிப்புக் குறிப்பு 4 இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf